सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## *யாழ்ப்பாணம்*

## *ஊடக அறிக்கை*

### *மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 134வது பிறந்ததின நினைவுதினம்*

*யாழ். இந்தியத் துணைத்தூதரகமானது அமுதசுரபி கலாமன்றத்தினருடன் இணைந்து, கவிஞர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலை வீரர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 134வது பிறந்ததின நினைவு தினத்தினை முன்னிட்டு வழங்கிய சிறப்பு நிகழ்வு, டிசம்பர் மாதம் 11ம் திகதி 2016 அன்று மாலை 4.00 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.*

*முன்னதாக, அரசடி சந்தி, நல்லூரில் அமைந்துள்ள மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் திருவுருவச்சிலைக்கு இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன், இந்தியாவிலிருந்து வருகை தந்த பிரபல தமிழ் பேச்சாளர் திரு நெல்லை கண்ணன், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மாவை சேனாதிராஜா, வடமாகாணசபையின் அவைத் தலைவர் கௌரவ சீ.வீ.கே. சிவஞானம், வடமாகாண விவசாய அமைச்சர் கௌரவ பொ. ஐங்கரநேசன், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சி. தவராஜா, யாழ்ப்பாண அரசஅதிபர் திரு. வேதநாயகன் மற்றும் பேராசிரியர் வேல்நம்பி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மகாகவி சுப்பிரமணிய பாரதியாரினால் எழுதப்பட்ட தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை பாடசாலை மாணவர்கள் பாடினர்.*

*இந்நிகழ்வின் அரங்க நிகழ்வுகள் நல்லூர், துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதில் தமிழகம், இந்தியாவிலிருந்து வருகை தந்த தமிழ் அறிஞரும், மிகப் பிரபலமான தமிழ் பேச்சாளருமாகிய திரு நெல்லை கண்ணன் அவர்களுடைய சிறப்புச் சொற்பொழிவு இடம் பெற்றது.*

*திரு நெல்லை கண்ணன் அவர்களுடைய சிறப்புச் சொற்பொழிவினைத் தொடர்ந்து மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளை உள்ளூர் பாடகர்கள் பாடிய சிறப்பு இசை நிகழ்வும் இடம்பெற்றது.*

*கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், கலா இரசிகர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட அரங்கம் நிறைந்த மக்களுடன் நிகழ்வு சிறப்புற நடைபெற்றது.*

*****

*யாழ்ப்பாணம்*
*டிசம்பர் 13, 2016*